தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 10, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 மார்ச் 24, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.”

“ஊழ்” என்பது வெல்ல முடியாத ஒன்று என்பார்கள். சோர்வில்லாமல் முயற்சி மேற்கொள்பவர்கள் அந்த ஊழையும் தோல்வி அடையச் செய்வார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

பாலம்

***12586—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி வட்டம், அய்யம்புள்ளி கிராமம், ஒத்தக்கடை பகுதியில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

[2023 மார்ச் 24

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அய்யம்புள்ளி கிராமம், ஒத்தக்கடை பகுதியில் பாலம் அமைக்கும் திட்டத்தின் செலவு மற்றும் பயன்பெறும் விகிதம் குறைவாக உள்ளதால் எந்த ஒரு திட்டத்தின்கீழும் இப்பணியினை சேர்க்க இயலாத சூழல் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தக்கடை பகுதியில் வரட்டாறு இடையே இருக்கக்கூடிய இந்தப் பாலத்தைக் கடந்துதான் கிட்டத்தட்ட 700–க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் சுமார் 570 ஏக்கர் நிலங்களில் வேளாண் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையிருக்கிறது.*

குறிப்பாக, அங்கே ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க வாய்ப்பில்லை என்று சொன்னாலும், ஒரு தரைமட்டப் பாலத்தையாவது அமைத்துக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், இடுபொருட்களையும், வேளாண் விளைபொருட்களையும் அங்கிருந்து எடுத்து வருவதற்கு அவர்களுக்கு உதவியாக அந்தப் பாலம் இருக்கும் என்கிற ஓர் உன்னத நோக்கத்தோடுதான் இந்தக் கேள்வியை நான் முன்வைத்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோடு கலந்துபேசி, அங்கு தரைமட்டப் பாலத்தையாவது அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், விவசாயிகளுக்கு அந்தப் பாலம் பயன்படும் என்பதில் மாறுபட்ட*

2023 மார்ச் 24]

கருத்தில்லை. ஆனால், வரட்டாற்றின் அகலம் 80 மீட்டராக இருப்பதாலும், வருடத்தில் 6 மாதங்கள் தண்ணீர் செல்கிறது என்பதாலும், அங்கு தரைமட்டப் பாலம் கட்டி பிரயோஜனம் இல்லை. உயர்மட்டப் பாலம் கட்டினால்தான் பயனுள்ளதாக இருக்கும். அங்கு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஏற்ப பாசனப் பரப்புகள் அந்தப் பகுதியில் இல்லாததாலும், நீர்வளத் துறையின் பயன்பாடு இல்லாததாலும், அந்த இடத்தில் பாலம் கட்டும் பணியை இத்துறையால் மேற்கொள்ள இயலவில்லை என்று இலாகா எனக்கு அறிவுறுத்தியிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தத் தொகுதியினுடைய நிலையை எண்ணி அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவருக்காக மீண்டும் ஒருமுறை மறுபரிசீலனை செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்தக் கேள்வியுடன் தொடர்புடையது இல்லையென்று சொன்னாலும், இந்தத் துறையோடு தொடர்புடைய ஒரு முக்கியமான கேள்வியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.*

பழனி சட்டமன்றத் தொகுதியில் குதிரையாறு அணை இருக்கின்றது. நீங்கள்தான் அந்த அணையைத் திறந்து வைத்தீர்கள். அந்த அணையினுடைய மதகின் முன் பகுதியில் உள்ள பாலம், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் சிதிலமடைந்திருக்கிறது. அதனைக் கடந்திருக்கிற பூஞ்சோலைப் பகுதியில் கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. விவசாயிகள் அங்கு செல்ல முடியாத நிலை இருக்கிறது. நம்முடைய நீர்வளத் துறையினுடைய அதிகாரிகள் அந்தப் பாலத்தை ஆய்வு செய்திருக்கிறார்கள்.

அதேபோல, நெய்க்காரப்பட்டியிலிருந்து புளியம்பட்டிக்கு செல்கிற அந்தச் சாலையில், கிட்டத்தட்ட 15 கிராமங்கள் இருக்கின்றன. அதில் இடது பிரதானக் கால்வாய் என்று ஒரு கால்வாய், பாலாறு–பொருந்தலாறு அணையிலிருந்து விவசாயப் பாசனத்திற்காக அந்தப் பகுதிக்குள் செல்கிறது.

அதில், வாய்க்கால் அருகில் உள்ள ஒரு பாலம் மிகக் குறுகிய நிலையில் இருக்கிறது. பொது பேருந்துகள் மற்றும் அரசுப் பேருந்துகள் அனைத்தும் அந்த வழியாகத்தான் செல்கின்றன. 15 கிராம மக்களுடைய வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு அந்தப் பாலத்தையும் அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு, கேட்டதையெல்லாம் கொடுக்கிற மகத்தான மக்கள் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வருடைய அரசு. இந்த அரசு கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதையும் நிறைவேற்றிக் கொடுக்கும் என்கிற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரையாறு அணை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது என்னுடைய இலாகா சம்பந்தப்பட்டது. அது உடனடியாக கவனிக்கப்படும். நெய்க்காரப்பட்டி கால்வாயை அகலப்படுத்தும் பணி எனது இலாகாவில் வருகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் பாலம் கட்டுகின்ற பணி எனது துறையின்கீழ் வருமா அல்லது ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருமா அல்லது மாண்புமிகு திரு. எ.வ. வேலு அவர்கள் பொறுப்பு வகிக்கின்ற நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருமா என்று எனக்கு சரியாகத் தெரியவில்லை. எனவே, நெடுஞ்சாலைத் துறைமூலம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இதுகுறித்து ஆய்வு செய்து, அவர்களேகூட அதைக் கட்டிக்கொடுக்கலாம். (குறுக்கீடு)

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேருந்துகள் செல்கின்ற பாதை என்று சொல்வதால் இதுகுறித்து நெடுஞ்சாலைத் துறைக்கு பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

2023 மார்ச் 24]

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில், பல்வேறு தடுப்பணை பணிகள் மற்றும் கால்வாய்ப் பணிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக முதலில் தொகுதியின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் நிலையூர், கம்பிக்கொடி கால்வாய், மாங்குளம், ஆனைக்குளம் கால்வாய் பிரிவிலிருந்து புதுக்கோட்டை, சூரம்பட்டி, வடுகன்குளம், முக்குடி, செங்குளம் மற்றும் பெரியமருதன்குளம் கண்மாய் வரை ஒரு கால்வாய் அமைத்துத் தர வேண்டும். இது விவசாயப் பெருங்குடி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்களுடைய ஆட்சியில் அந்தக் கால்வாயை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேதோ கிராமங்களின் பெயர்களையெல்லாம் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டதையெல்லாம் ஒரு மனுவாக எழுதிக் கொடுத்தால், துறைக்கு அனுப்பி அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதி, ஈசூர் ஊராட்சியிலிருந்து வல்லிபுரம் ஊராட்சியை இணைக்கும் பாலாற்றின் குறுக்கே பாலம் உள்ளது. இது மிகவும் பழமையானது. இந்தப் பாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. அது மதுராந்தகத்திலிருந்து திருக்கழுக்குன்றம் செல்வதற்கு மிக முக்கியமான சாலையாக விளங்குகிறது. மழைக் காலங்களில் அதிகமாக வெள்ளப்பெருக்கு ஏற்படும்பொழுது, வெள்ளத்தில் இந்தப் பாலம் அடித்துச் செல்லப்படுகிறது. இதனால் போக்குவரத்து*

[*2023 மார்ச் 24*

துண்டிக்கப்படுகிறது. இவ்வாறு பாலம் சேதமடைகின்றபொழுது மதுராந்தகம் செல்பவர்கள் ஆற்றைக் கடக்க முடியாமல், செங்கல்பட்டு சென்றுதான் மதுராந்தகம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துணைக் கேள்வியாக இந்த இடத்திலிருந்து அந்த இடத்திற்குச் செல்வதற்கு பாலம் அமைக்கப்படுமா என்று மட்டும் நீங்கள் கேளுங்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *எனவே, மழைக் காலங்களில் அந்தப் பாலம் அடிக்கடி சேதமடைந்து, பின்பு அது தற்காலிகமாகத்தான் சரிசெய்யப்படுகிறது. நிரந்தரமாகச் சரி செய்யப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கதை மிகவும் சோகமாகத்தான் இருக்கிறது. அடிக்கடி பழுது ஏற்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால், அது எந்தப் பாலம் என்று பார்க்க வேண்டும். அது ஊராட்சியின்கீழ் வருகின்ற பாலமா, ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகின்ற பாலமா அல்லது நெடுஞ்சாலைத் துறையில் இருக்கின்ற ஒரு பிரிவைச் சேர்ந்த பாலமா என்று பார்க்க வேண்டும். பாலத்தைப் பற்றிக் கேட்டதனாலேயே எல்லா பாலங்களையும்* Irrigation Department *செய்து தராது. எங்கள் துறையின்கீழ் வருகின்ற பாலங்களுக்குத்தான் நான் செய்து தர முடியும். பாலங்கள் கட்டுவது என்பது பல துறைகளின்கீழ் வருகின்றது. நீங்கள் சொல்வது நியாயமான பிரச்சினை. அனைத்துத் துறை மாண்புமிகு அமைச்சர்களும் நீங்கள் சொன்னதைக் கவனித்திருக்கிறோம். யாராவது ஒருவர் அதைக் கட்டிக் கொடுக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.G. *வெங்கடாசலம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*